உ

தேவிசகாயம்.

திருமயிலைக் கற்பகவல்லியம்மையந்தாதி

இஃது.

ஷை - யூரிலிருக்கும் - புதுப்பாக்கம்.
சமுத்திரு-வீராசாமிமுதலியாரும்
புரசைப்பாக்கம்
ஷை - யூர் - அப்பாவுமுதலியாரும்.
திருமயிலை
சண்முகத்தம்பிரானுங்கேட்டுக்கொண்டபடி
திருமயிலைக்காரணீஸ்வரர்கோயில்
தெருவிலிருக்கும்
நல்வேளாளகுலதிலகராகிய
முத்தையாமுதலியார்
குமாரர்
இங்கிலீஷ் தமிழ்உபாத்தியாயராகிய
அப்பாசாமிமுதலியாரால்
பாடப்பட்டு
புரசை - அஷ்டாவதானம்
சபாபதிமுதலியார்
முன்னிலையில்
பரிசோதிக்கப்பட்டு
வேலூர்- தாட்டாகுல- இராஜகோபாலுநாயகர்
குமாரர்.
வே-தா-பார்த்தசாரதிநாயகரால்
தேசாபிமானி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை - அரு-அ.

தி - அண்ணாமலைமுதலியாரால்
அச்சடுக்கப்பட்டு
பிரசுரஞ்செய்யப்பட்டது.

பராபவ ௵ சித்திரை ௴

உ

தேவிசகாயம்.

திருமயிலைக்

கற்பகவல்லியம்மையந்தாதி

காப்பு

நீர்கொண்டமேகந்தவழ்பொழிலார்வளனீண்மயிலைத் ....*
தார்கொண்டபுன்னைநிழற்கீழ்த்தனிமுதல்தன்வலப்பா, ...*
லேர்கொண்டகற்பகவல்லியந்தாதியியம்புதற்குப் ....*
பேர்கொண்டவைங்கரக்கூத்தாடும்பிள்ளையைப்பேணுநெஞ்சே

திருவளர்பொற்கமலாசனமங்கைதிகழ்கலைமா ....*
துருவளர்தெய்வவரம்பையர்போற்றுமுயர்பதத்தாள் ....*
பெருவளமோங்கியமாமயிலைப்பதிப்பெண்ணமுதா ....*
மருவளர்கூந்தலெங்கற்பகவல்லியைவாழ்த்துளமே ....(க)

உள்ளக்கருமலம்போக்கியிம்மாநிலத்துற்றதுயர்க் ....*
கள்ளங்கழியவகைபுரியாய்கறைக்கண்டனிடம ....*
விள்ளருமெய்ப்பொருளாகியபூரணிமேதகுநீர்ப்..... ....*
பள்ளப்பழனப்பதிமயிலாபுரிப்பார்ப்பதியே........... . .....(உ)

யார்ப்பதியாயுலகாண்டுமதுரைப்பரமனுக்குத்......... ....*
தார்ப்பெருநீண்முடிதந்ததடாதகைதற்பரைமா .... *
தீர்ப்பதுமத்தடஞ்சூழ்மயிலைக்கணிறைமுதல்வி ....*
சீர்ப்பதம்போற்றுமின்றன்பேரருணிழற்சேர்க்குமின்னே..(௩)

மின்னார்சடைநதிவேணிப்பிரான்மகிழ்மெய்ப்பொருளென் ... ...*
றெந்நேரமுந்துதித்தேத்தறியேனுய்வதெவ்வணமிக்.... ....*
கன்னேர்மனத்தனைக்காத்தருள்வாய்கமலத்தடத்திற்.. .... *
பொன்னாரனம்பயின்மாமயிலாபுரிப்பொற்கொடியே ....(௪)

ஆ

கொடியாரிளம்பிறைநெற்றிக்குங்கூர்விழிச்குஞ்சிறிய .... *
துடியாரிடைக்குமயங்கிவருந்தித்துயர்க்கடலிற் .... *
படியாமலுன்பதநீழலிற்சேர்த்துப்பரிந்தருள்வா......... ... .*
யடியார்தொழுந்திருமாமயிலைப்பதியம்பிகையே................(௫)

அம்பிகைாவமியகிலசராசரியாதிசத்தி ....*
யெம்பெருமாட்டிநன்முக்கண்ணிருவியெழின்மயிலைச் ....*
செம்பொருட்பேரொளிகற்பகவல்லியிச்சிற்றடியேன் . . ..*
வம்பறுத்தாட்கொளிமவான்றருமெழின்மாணிக்கமே....... (௬)

மாணிக்கமொத்தநின்பாதந்தலைமிசைவைத்துநிதம் ....*
பேணித்துதிக்கவறியாதபுன்றெழிற்பேதைக்குவந் ... .*
தாணிப்பொன்னேமயிலாபுரிமேவியவந்தனிடங்.... . . ..*
காணிக்குரிமைபெறுங்கற்பகவல்லிசாந்தருளே .... (௭)

அருள்கொண்டநின்னடியார்திருக்கூட்டமடைந்துறைய.......*
மருளுறுமைம்புலச்சேட்டையற்றேனிலைமாசொன்றிலாத்..... *
தெருளுதவுந்திருத்தாளளித்தாள்சிறி யனையொள்வேல்........*
வரிவிழிக்கோதையர்வ ழ்மயிலாபுரிமாதுமையே ....(அ)

உமையிருநாழிநெற்கொண்டுலகத்துயிரைப்பு க்க................*
வமைபுமெ ன்னுன்கறமீட்டியவாடாவம்புனையுஞ்................*
சுமைபுறுசெஞ்சடைமாதரிதேவர்தொழுமயிலை ....*
யமையெனுமந்தரியாதரிப்பாயெமையாரணியே......... .... (௯)

ஆரணனாரணன்வானவர்யாருமறிவரிய ....*
சீரணவுந்திருப்பாதந்தொழுதுய்யச்செய்தருள்வாய்..............*
காரணிகார்விடமுண்டானிடம்வளர்கன்னியெனத் ....*
தாரணியெங்கும்புகழ்மயிலாபுரிச்சங்கரியே...... . ...(௰)

சங்கரிசாம்பவிசந்திரசேகரிதக்கனழல்.... .... *
பொங்கியவேள்வியவித்தேயவன்புன்றலையரிந்து.... .... *
பங்கம்புரிவித்தநின்புகழ்பாவர்பகரவல்லார் ....*
தியகளணிசடையெம்மான்மயிலையிற்றேமொழியே...... .... (௰௧)

தேனூரிதழியுந்தும்பையுங்கூவிளந்தேமலரும் .... *
வானூர்மதியணிவேணிப்பிராட்டியெம்மான்மகிழுங்............ *
கானூர்பொழிற்புன்னையோங்குமயிலையிற்காரணியிவ் .. .. *
வூனூர்பிறவித்துயர்நீக்கியாண்டருளுத்தமியே................(௰௨)

உத்தமிஞானச்சிவகாமிமாதரியொண்கயிலை . ... *
யத்தனிடத்துறையெம்பெருமாட்டியழகுறைகொள்..... ....*
பித்திகைமாடமயிலையில்வாழெம்பிராட்டிபரா......................*
சத்திபராபராகற்பகவல்லிநின்றுணையே.........................(௰௩)

துணையாளவென்றனித்தாயெனப்போற்றித்திரிசுருமா.........*
லணையாதுவெம்பவப்பௌவங்கடக்கவருட்கழலைப்.... ....*
புணையாசப்பற்றிக்கரையேறவெற்குப்புரிமயிலைப் ... .*
பணையாரும்பொற்றொடித்தோளாரணம்பயில்பைங்கிளியே. .*

கிளைமக்களானவெம்பாலையிற்சென்றுனைக்கிட்டவொண்ணாத்.. *
தளைதனிற்பட்டுழல்வேனையெடுத்துன்சரணளித்துத் ... .*
தெளிதருஞானவழிதெரிப்பாய்மலர்த்தேமணமார் .... *
குளிர்புனல்சூழ்மயிலாபுரிவாழெங்குலதெய்வமே. .... .. (௰௫)

குலமறைபோற்றுஞ்சிலம்புசிலம்பணிகோகநத ....*
மலர்நிகர்தாளையனுதினமுன்னவரந்தருவா.... .... *
யிலகுபுலோமசைகேள்வனமரரிறைஞ்சுமெழிற் ....*
சலசநிறைதடஞ்சூழ்மயிலாபுரித்தற்பராயே ....(௰௬)

தற்பராவிற்புராயொண்ணுதற்பூங்கொடிசங்கரன்பாற் ....*
சொற்பொருள்பாற்சுவையென்னவமர்ந்தருள்சுந்தரிநின்!........*
பொற்பணிமாளிகைசூழ்மயிலாபுரிப்பூரணியெங்.... ....*
கற்பகவல்லிபொற்றாளையென்ஞான்றுங்கருதகமே.......... (௰௭)

கருதுவதுன்பதம்பாடுவதுன்புகழ்காசினியி... ....*
லுருகுவதுன்னடியார்க்கன்றிவேறிலையோதரிய,....... ....*
திருவருணோக்கஞ்சிறிதுவைத்தாணறுந்தேமலர்ப்பைந்..... .....*
தருவளர்சோலைமயிலையின்மேவியதண்ணளியே...............(௰௮)

தண்ணளியார்தருநீழலமரர்தவமுநிவர்
தண்ணருநின்பதச்சேவையெனக்கென்றுநண்ணுமன்னே
விண்ணிலெவன்றுய்மற்றவையிரண்டாதியெனவிளங்குங்
கண்ணொளியேதிருமாமயிலைப்பதிக்கண்மணியே (௰௯)

மணியேமணிமுடிமாபாண்டிராசன்வரத்திஃவரு
மணியேயணிகிளர்முத்தனமாமகளேயகன்று
தணியாதெனைத்தொடர்மாயப்படலத்தின்சார்பிலுறும்
பிணியாற்றியாண்மயிலாபுரிமேவியபேரொளியே (௨௰)

ஒளிர்பொற்சிலம்பணிநின்சீரடியையுவந்தலராற்
றெளிவுறப்பூசித்திணங்கறியாப்பொய்யன்சித்தத்திலுன்
னளிர்பதம்வைத்துக்களித்திருந்தாணலனூர்மயிலை
மிளிர்கயற்கண்ணிணைக்கற்பகவல்லிவிமலமின்னே (௨௧)

விமலையென்னம்மைமகிடற்செற்றாள்வினைப்பூட்டறுத்துத்
தமமுறும்பொய்ம்மையகற்றுமுநிவரர்தங்களைக
ணிமையவர்போற்றும்பணையென்றுன்றாளிணையின்றடைந்தேன்
கமையுறவந்தருள்சீர்மயிலாபுரிக்கார்மயிலே (௨௨)

மயிலாகிச்சங்கரனைப்பூசைசெய்தநின்மாண்புணர்க்க
வயனாலுமாதலரிதெனிற்பேதையறைவதெங்ஙன்
வியனூர்நினதருளாலன்றிமாமலைவேந்தளித்த
குயிலேமலர்ப்பொழின்மன்னுமயிலையிற்கொற்றவளே (௨௩)

கொற்றமுற்றுமிறுமாப்புகொண்முப்புரத்தாரைவென்ற
பொற்றனிமேருவிற்கையாளிவாமத்திற்பூரணிநூற்
கற்றறிகேள்விப்புலவர்பராவுங்கடிமயிலைச்
சிற்பரைகற்பகவல்லிபொற்றாளென்சிரத்தணியே (௨௪)

சிரத்தணிமாலையும்வெள்ளென்புநாகத்திருப்பணியுங்
கரத்தலைமான்மழுவுங்கொளுங்காரணன்காதலியென்
றிரைத்தருமாமறையோதுமபுராதனியெற்குமெய்ம்மை
யுணர்த்தருள்தென்மயிலைப்பரைமாதவர்க்குள்ளறிவே (௨௫)

அறிவேயறிவுக்கறிவரிதாமுன்னடியரவக் ....*
குறியாமலிப்புவிமீதுழல்வேற்கஞ்சல்கூறியென்றும் .... *
பிறியாமனின்னருணீழலிற்சேர்ப்பதெந்நாள்பிறங்கு .... *
மறிதோலுடையணிந்தேந்திமயிலையில்வாழமுதே .... (உ௬)

அமுதத்தருமலைவாரிதிமேற்றுயிலச்சுதன்கூர் ....*
தமரந்தருசங்கபாணிக்கிளையசகோதரிசீர்த் .... *
தமர்வந்துபோற்றுமயிலையில்வாழ்சிவசத்தியெர்கு ....*
திமிர்புன்மையற்றளைபோக்கிக்கருணைசெய்நீணிலத்தே.... (உ௭)

நிலமங்கைதொண்டைநன்னாடெனுமென்முகநின்றிலகுந்....*
திலகந்தரமெனுஞ்சீரார்மயிலையிற்சிற்பரையிவ்............... .... *
வுலகந்தனிற்சனனப்பிணிகோட்பட்டுறுதியின்றி.................. *
யலமந்துழலுஞ்செயனீக்கிவந்தெனையாதரியே .... (உ௮)

ஆதரிப்பாரிலைநீயன்றியென்றடைந்தேனகத்திற் .... *
றீதரித்துன்பதநீழலிற்சேர்த்துச்சிவாநுபவ ....*
நாதரிற்கூட்டியுன்மெய்யடியாமெனநாட்டிவைப்பாய்.........*
மாதரிக்கார்வயல்சூழ்மயிலைமகேஸ்வரியே .: ... .(உ௯)

வரையாமரகதமேனியன்னேயுனைவந்தடைந்தோர்ச் ... . *
குரையாதபஞ்சாக்கரஞானவோதனமூட்டியன்பாய்............*
விரையார்கழற்பதமீந்தவம்மேமருள்வெவ்வினையாந்....... .....*
திரையாவுநீக்கியளிப்பாய்மயிலைச்சிவந்தியே ... .(௩௰)

திதியாள்பவனிந்திராதிதிக்கினிருபர்களுந் .... *
துதிமேவுசெய்தவயோகாதிபருந்துலங்குகைவேற் ....*
பதியாதிமாலும்பணிந்தேத்திவாழ்மயிலைப்பதியி .... *
னதிகாரிகற்பகவல்லியொற்றாளையடைநெஞ்சமே .... (௩௧)

நெஞ்சத்திலுள்ளும்புறனுமிலகுமுன்னீள்பதத்தை ....*
வஞ்சகப்பொய்யனறிந்துணராமல்வழிமறித்துச்.. ....*
சஞ்சிதமாதியெதிர்வந்திகலித்தடைபுரியா......... ....*
தஞ்சலென்றுன்மயிலைக்கிறைவியருள்புரிந்தே.... ...... (௩௨)

இறைவியினியுயிராமாலவாலத்தினிற்கொடிய .... *
சிறைசெயுமைம்புலமாந்தருவேர்களைந்தேசிறிதுங் .... *
கறையின்மெய்ஞ்ஞானப்பயிரேற்றிமும்மலமுங்களைந்து ..... *
துறைகொண்மெய்ப்போகமருண்மயிலைச்சிவசுந்தரியே (௫௩)

சுந்தரமார்மணிமாடமயிலைச்சுதந்தரிகார்க் .... *
கந்தரச்செந்திருமேனிப்பிரான்வலங்காணிகொண்ட .... *
வந்தரிகவுரியமலையடிமையகத்தினிது .... *
வந்தரிதாம்பொய்ம்மைமாற்றிக்களித்துமகித்தருளே .....(௫௪)

மதிப்பிலிவ்வாழ்வைநிலையெனக்கொண்டுமயங்கிச்செம்மாந் ..*
ததிற்புகுந்தாழ்வினையாலுழன்றேயுனக்கன்புகொள்ளாக் . .....*
கொதிப்புறுபாழ்வெள்ளறிவனையாள்குலமாமறைக ... .*
டுதித்திடுசீர்மயிலைப்பெருமான்வலந்துன்னுபொன்னே (௫௫)

பொன்னேநவமணிப்பெட்டகமேபொற்கடுக்கையந்தார் .... *
பன்னகமாமுடிவேணிப்பிரான்றிருப்பாகமுறை .... *
மின்னேத்ரியம்பகிமாய்கைவினைப்படலந்தொடரா ....*
தன்னேயருள்புரிமாமயிலைக்கணருட்கொடியே . ... (௫௬)

கண்ணேகண்ணுட்டிகழ்மாமணியேகடையேனிதயத் .... *
துண்ணிற்கும்பொளியானபரஞ்சுடரேயுவந்தெ .... *
னெண்ணத்தைக்கூட்டியருள்புரிவாயிமையோர்பரவும் ......*
விண்ணிற்பொலிமயிலாபுரிமேவியவித்தகியே .... (௫௭)

வித்தகர்சித்தர்கணநாதர்நாரதர்வீணைவல்லோர் . ...*
தத்துவநன்னெறியோகியர்தெய்வத்தனிமடவார் ....*
பத்திநெருங்குமயிலைப்பதியுறைபானலஞ்சொற் ....*
றத்தைமொழிகற்பகவல்லிதாணிதஞ்சார்மனனே .... . (௫௮)

சாராமனின்னடிதையலர்மாயத்தழற்கடலிற் ....*
பேராமலாழ்ந்தடுலையனைக்காத்தருள்பேசரிய ....*
சீரார்மலர்ப்புன்னைநிழலின்மன்னியதேவன்மகிழ் ....*
தாரார்குழற்சிவசத்திமயிலையிற்சாம்பவியே ....(௫௯)

சாம்பவியாதிதனிப்பரமானந்தசத்திசிவை……………*
காம்பணிதோட்பரிபூரணிகாங்கெயனைப்பயந்த……………*
தேம்பரிமென்மலர்க்கூந்தற்பராபரைதீமைவினை……………*
யோம்பியளித்தருண்மாமயிலைக்கணுயர்தவமே……………(௪௰)

தவமேதவமுயலாமலிந்நாண்மட்டுந்தாரணியி……………*
லவமேபுரிந்துபலிச்சூழல்வேனைவந்தாதரித்துச்……………*
சிவயோகங்காட்டிமலக்காடறுத்துநற்சின்மயமாந்……………*
தவஞானவீடுதருவாய்மயிலைத்தனிப்பொருளே……………(௪௧)

தனியாம்பரிதிமுதற்கிரகங்களுந்தாமென்செயும்……………*
அநியாயவெவ்வினைச்சாதகமென்செயுமாடரவின்……………*
றுனியாருநஞ்சமென்செய்யுமினியெனைத்தொன்மயிலைப்……………*
பணிவார்குழற்கற்பகவல்லிதாள்சரணபற்றினனே……………(௪௨)

பற்றகன்மாதவர்பூசுரர்வேதாகமங்கள்பன்னி……………*
சுற்றிப்பணியுமயிலைத்திரிபுரசுந்தரியித்……………*
தெற்றுமலைகடல்சூழ்புவனத்தினிற்சிற்றடியேற்……………*
குற்றதுயரறத்துன்பதநீழலுவந்தருளே……………(௪௩)

உவப்புறநின்பணியேசெயவுன்பதமுட்பதிக்க……………*
வவப்பகைநீக்கிநின்னாமம்புகலவரியவன்பாற்……………*
றவப்பெருநின்னடியாரொடுங்கூடச்சகத்தளிப்பாய்……………*
சிவப்புறுமாடமயிலைப்பதியுறைநிற்குணியே……………(௪௪)

நிற்குணிபொற்சிகரத்தனிமேருநெடுங்கிரியாம்……………*
விற்குனித்தோர்முப்புரத்தைச்சிரித்தவிமலர்மணிப்……………*
பற்பணிசூடும்பரமர்மயிலைப்பரையெளியேன்……………*
முற்பிணியாவையுந்தீர்த்தாளருளொளிமொய்த்தமுத்தே(௪௫)

முத்திக்குவித்தெனச்சித்தரமரர்முநிவர்குழா……………*
நத்தித்தவஞ்செய்துபோற்றும்பவானிநறுமலரிற்……………*
றித்திக்கத்தேனுறுந்தண்டலைசேர்மயிலைத்திருவை……………*
பத்தித்துதிக்கவெவர்க்களித்தாள்தன்பதாம்புயமே……(௪௬)

அம்புயப்பாதமடியேன்சிரத்தில்வைத்தன்பர்பணி.. ....*
நம்பிப்புரிந்துனைநாடவரந்தருவாய்நலங்கொள்...............*
கும்பமுநிமுதலோர்தொழுதேத்துங்குளிர்பொழிற்கண்......*
ணம்பரஞ்சூழ்திருமாமயிலைப்பதியாரணங்கே.... ....(சஎ)

அணங்குற்றுனைத்துதியாதபொய்வஞ்சனையல்லல்புரிந்,. .....*
திணங்கித்திரியுங்கொடியனைக்காத்தல்செய்தேயருள்வாய் .....*
சுணங்குற்றபூண்முலைக்கூர்விழித்தோகையர்சூழவந்து.... .....*
வணங்கிச்சுரோசர்வரங்கொண்மயிலைமடவனமே... ....(சஅ)

அனமெனமென்னடைபொல்கியசிற்றிடையங்கனையார்.......*
தனமலைசூழ்புவிமண்ணாசைமிக்குத்தவித்திடுவேற் ....*
குனதிருத்தாளளித்தாள்வையெனிலுமையேமயிலை.... ....*
முனையயில்வாள்விழியாயெனக்கொப்பெவர்முச்சகத்தே (சகூ)

முச்சுடராகியமுக்கணியந்தரிமூதறிஞர் ....*
மெச்சுமுன்பாதத்திருச்சேவைதந்தருள்மென்மணியார் .... ..*
கச்சுறுகுங்குமக்கொங்கையம்மேமயிலைக்கவுரி ... . *
மைச்சிகரப்பொன்மலையான்சுதையெனவந்தவளே..... (ருய)

அவமாகியவைம்புலச்சேட்டைநீக்கியுன்னம்புயத்தா .... *
ணவமார்நிழலினிற்றங்கவளித்தருளுன்மறைசொல்............ *
துவர்வாய்ப்பசுங்கிளியேபனமேயச்சுராதியர்கள் .... *
பவமாறவந்துதொழுமாமயிலையிற்பைங்கொடியே .... (ருக)

பைங்கட்கருப்புவின்மாரனைக்காய்ந்தபரமன்மகிழ்த்.... .... *
திங்கட்டிருமுகமாதரசேமயிலைத்திருவே .... *
வெங்கட்கொடும்பவநீக்கியருளன்புண்மேவுதொண்டர்..... *
தங்கட்குவந்தழியாப்பதநல்குந்தவக்கொழுந்தே ....(ருஉ)

கொழுந்தாரமழுமிழ்முத்தலைச்சூலிகுணாகடல்சூழ்............... *
செழுந்தாரணிதொழுஞ்சீர்மயிலைப்பதிச்செல்வியைமா...... . *
விழுந்தாரலர்க்குழல்வல்லியைப்போற்றினர்வெவ்வினையுள் ....*
ளழுந்தார்சனனங்கடந்திடுவாருண்மையாமிதுவே.........(ருங)

யாமின்புறத்தன்னருளளித்தாளினிதாய்ப்பகர ....✽
தாமந்தெரித்தனள ஃபர்குழாமுறநாட்டினளால்.... ....✽
தேமன்பொழின்மயிலைக்கற்பகவல்லிசெல்வியெளி .... ✽
யேமென்விரும்புவமீதேயமையுமினியெமக்கே .... (ருச)

தினமாரனம்பயி செவ்வனசத்தடமேய்ந்தமணிச் ....✽
கனமாருமாடமயிலைப்பராசத்திகாளகண்டத் ... .✽
தனிநாயகர்க்குமணாட்டியெனநினைச்சார்ந்தனனித் ....✽
தினநீயருள்செய்யழிவற்றமெய்ம்மைதிகழ்சுடரோ... .....(ருரு)

திகழ்மறையாகமநூல்சொலு நன்னெறிதேர்ந்தறியா ....✽
தகமலமூடுமசடனையாண்மயிலைப்பதியிற். ... . ✽
சுகவுருவாகும்பரஞ்சோதியானசுடர்விளக்கே .... ✽
தகவுறுமாழித்தனிப்படைமாலின்சகோதரியே .... (ருசா)

மாலுறவையன்மகிழ்கலியாணிமலர்த்தடத்திற்........ ....✽
சூளுளைந்தொண்ணித்திலந்தருஞ்சங்கினஞ்சூழ்வயலி ....✽
லோவிடுந்தென்மயிலைப்பதியுத்தமிபுன்னடிமைப் .... ✽
பாலன்புரிபிழையாவையுந்தீர்த்துப்பரிந்துதவே..... ... ..(ருஎ)

பரிதரியாகப்புரிந்தோன்மதுரைப்பதிச்செழியன் .... ✽
புரிதரும்வேள்வியில்வந்தவம்மேபொழில்வாய்மலர்கள் ....✽
விரிதரவண்டிசைபாடுமயிலையில்வித்தகியே ....✽
பரிபுரபாதமருளெங்கணுநிறைவாம்பரையே .... (ருஅ)

நிறைவாகியசிவமெய்ஞ்ஞானநல்வழிநின்றுநிதங் ....✽
குறையாதநின்கருணைப்பதம்போற்றுங்குரவரரு............... ✽
மறைவாய்மைபாடுமயிலைப்பதிச்செல்விவல்வினையாஞ் ....✽
சிறைவாயகப்பட்டுழலாதருள்புரிசேயிழையே. ....(ருகூ)

சேய்க்குத்துயரொன்றுறினதுநீக்கித்தெளிந்தளித்தல்.........✽
தாய்க்கன்றிமற்றெவர்க்குண்டேகருணைசொற்றுற்றிளம்பைங்
காய்க்கதலித்தருவானூர்மயிலைக்கவுரிநலம்..................✽
வாய்க்கவொருவரம்வந்தளிப்பாயுள்ளமாசறுத்தே ....(சுய)

மாசற்றவேதப்பரிபுரமார்க்குமலரடிக்கண் .... *
ணேசத்தவமொடுமெந்நாளு நின்னை நினைந்துமலர் .... *
வாசத்தடமயிலைப்பதிக்கற்பகவல்லிபொல்லாப் ... . *
பாசப்பவமற்றுப்போற்றச்சிறிதுகண்பார்த்தருளே ....(சுக)

அருளாயருளின்கனியாயருமறைபாம்பொருளின் ....*
தெருளாகியவன்பர்செய்தவமேமிகத்தீங்குவினை ....*
இருளார்மனத்தன்மருணீக்கியென்னிதயத்தினில்வாழ்ந் ,.... *
தருளாயிருந்தவர்சூழ்மயிலைப்பதியம்படையே.... ....(சுஉ)

அம்பரமேவும்புனிதசுராதிபனரயன்மால்.......... . . .. *
உம்பர்சிகாமணியாவரும்போற்று மாருமுதல்வி.. ... .*
தும்புருநாரதர்பாடித்துதித்துத்தொழுமயிலை ....*
யெம்பெருமாட்டியிருதாளிதையத்திருத்தினனே..... .... (சுங)

இரும்பாரிடத்துறமுவாசைநீத்தவிருடிகளும் ....*
அரும்பாவைகளொத்தசைவற்றயோகமதாற்றும்பொறிச்.... *
சுரும்பார்மலர்வனஞ்சூழ்மயிலாபுரித்தோகையென்றன் ......*
கரும்பாதகவினை நீக்கியளிசகக்கடனுனக்கே........ ....(சுச)

உனதுபதாம்புயமோங்கியவாழ்வென்றொருநிலையாய் .... *
மனதையடக்கிமறைபுகல்வாசிய வாய்மைநின்று ... ... *
புனிதப்படா ழ்புன்மதியேனைப்புரந்தருள்வாய் .... *
நனிதவர்வேள்விபுரிமயிலாபுரிநாயகிம்ப ....(சுரு)

நாயேனடைந்திலனின்பாதசேவைநின்றமங்களைப் ....*
பேயேன்றுதிக்கவறியேனடிமைப்பணியருள் ....*
வாயேமயிலைப்பதிக்கற்பகவல்லிமன்னுயிர்க்குத், ...*
தாயேயறிவறுபேரின்பமுத்திச்சுதந்தரியே .... (சுசா)

தரியாதிக்காயச்சுமைசுமந்தமியேனவலம் ....*
புரியாதிருக்கவிப்போதேடற வினைபோகப்பரி ... .*
கரியாய்மெய்ஞ்ஞானந்தருவாய்மயிலையிற்காரணியே ....*
விரியாரலர்கொன்றைச்செஞ்சடைநாதன்வியந்தவம்மே (சுஎ)

தவமொன்றுசெய்திலனல்லோரிடத்தினிற்றங்கியறம் ....*
புவிமீதுலேதும்புரிந்திலனுலுயிர்போம்பொழுதி ....*
லவமேநமன்கைவிற்சிக்காதுப்பும்படியாண்டருள்செய் ... ..*
சிவநேசர்வாசமயிலைப்பதிபுரைசிற்குணியே .... (௬௮)

குணமிலிப்பேபனைத்தண்டதரன்கைக்கொடுங்கயிற்றிற் ....*
பிணிபட்டுளம்வருந்தாமலென்முன்வந்துன்பேரொளிசேர்.*
தணவருங்காட்சிதருவாய்நறுமலர்த்தண்டலைகா. ....*
ரணவுந்திருமயிலைப்பதிமன்னியவாயிழையே......... ......(௬௯)

இழைக்கரும்பேரொழிற்சித்துருமங்கலையின்கருணை. ....*
மழைக்கட்கொடிமயிலைக்கற்பகவல்லிமன்னுமிடங் ....*
குழைக்குறுகாதண்ணலார்வலப்பாகங்குலமறையின் ... . *
தழைக்குஞ்சிரமோடுணர்ந்தோருளமெனுந்தாமரையே . (௭௰)

மரையினங்கானலைநீரொனநாடுவபோன்மலர்க்கா ....*
மரைமபன்முட்டுமின்றைநந்தாமன்மதிக்குநின்ற ....*
மரையடைந்தேத்தப்புரிவாய்கயலினமாதர்தண்டா ....*
மரைமலர்த்தாவும்வளங்கூர்மயிலையில்வாழ்சிவையே ....(௭௧)

சிவசமயப்பரிபாலியெவருந்தெளியமுன்பா ....*
னவமிகுபொற்சலத்திற்சுரர்தீந்துமெய்ஞ்ஞானப்பயிர்........*
தவவிளைத்தோர்மகவாய்ச்சமணக்களைந்தாய்மயிலைப் . . ..*
புவிபுகழ்பூரணியென்சிரத்துன்றாள்புனைந்தளியே .... . .(௭௨)

புனலோடுபார்விண்வளியங்கியாகிப்புவனமெலா ....*
மினிதாய்நிறைந்துநிறையாதுறைகுவையேயெங்ஙனந் .... *
தனிநாயகிபுன்னளவினையோர்ந்துன்சரணடைவேன்,....... . .. *
வினையோட்டியாண்மயிலைப்பதிமேவியமெல்லியலே ......(௭௩)

இயலார்மலரின்மணமுமணியினொளியு ... .*
நயமாரும்பாற்சுவையும்போலெம்மாதொடுநண்ணிவளர் ... .*
குயிலேபுயறவழ்மாடமயிலைக்குட்கொழுஞ்சுடர். .. ..*
மயிலேமயிற்குமரற்பயந்தாய்[illegible]யே. . ... . (௭௪)

மாருதவாசைச்சுழிதனிலென்மனமாமதமா .... *
வேருதழுந்திவருந்திப்பொருந்தியிருப்பதந்தோ .... *
சீருதுநீகடைக்கண்பார்க்கிலுய்குவன்றிண்ணமிது .... *
கூருமதிநுதற்கொம்பேமயிலையிறகோமளையே .... (௭௫)

கோபுரத்தான்விண்ணவர்தம்பதியிற்கண்கொண்டுதொழக் .. *
கோபுரமபொன்னுலகெல்லைமட்டுந்திகழ்கோயின்மன்னு .... *
மாபுரமாமயிலைப்பெருமாட்டியெம்மன்னுயிருந் .... *
தாபரமுந்தனித்தானும்பராபதஞ்சார்மனனே .... (௭௬)

சாராமனின்னடியாரைத்தினமுஞ்சலங்கொண்டுவீண் .... *
காராகுமாணவமேமிகுந்தேயுழல்கள்ளநெஞ்சன் .,. . ... *
நேராகவந்துன்றிருக்கோலங்காட்டியெர்நேரமுநின் .... *
ருரார்பதந்தொழவைப்பாய்மயிலைத்தனிவிளக்கே .... (௭௭)

விளங்கியமுத்தண்டகோடியைவென்மணற்சோறெனச்செய் *
துளங்களித்தேவிளையாடுங்குமாரியுயர்வெளியாங் .. .. *
களங்கமின்மூலத்தலமெனமாமயிலைக்கணுறை .... *
யிளங்கொடியேவந்தடைந்தேனையாளிதயங்களைந்தே..... (௭௮)

களைந்தொருநான்மறையும்போற்றுந்தென்மயிலைக்கவுரி . . *
திளைந்துடல்கூனிவருந்திப்பின்சண்டன்றெறுஞ்சமயத் ...... *
திளைந்துன்சரணத்தையேத்தறியேனிதுபோழ்திலன்னே ....*
விளைந்துநின்பேர்புகல்கின்றேனன்னுளில்வந்தாள்வியந்தே ௭௯

தாளாருந்தாமரைநீள்வாவிசூழ்மயிலைத்தலத்தில்............ ..,. *
வாளாருங்கண்ணரமாதர்கள்போற்றமகிழ்ந்துறைவாய் ... .*
மாளாவரந்தவர்க்கீந்தருணின்பொன்மலர்க்கழலுக் ....*
காளாகினேன்வன்மனங்குழைத்தேயெடுத்தாண்டருளே (௮௰)

அருட்படுமாமலர்க்கண்ணும்புகலியணிமகற்குத் ... . *
தெருட்படுஞானவமுதீந்தசெப்புஞ்சிறந்தநெஞ்சத் .... *
தருட்படுதாமரைத்தாளுங்கொடியசமன்றமரான் ....*
மருட்படும்போதுமறவேன்மயிலைமறைப்பொருளே ..... (௮௧)

மறையேபுகநின்பதம்பதமென்னமதித்தவென்னை .... ✻
யுறையேயநிகர்விழிமானார்மயலிலூறுவித்திந்த, ... ✻
கறையேறியகொடும்பாசச்சிறையிற்கலங்கவைத்தன் .... ✻
முறையேமயிலைப்பதிவாழுமைமையெழின்முக்கண்ணியே.. (௮௨)

கண்ணுவதுன்திருநாமங்களித்துக்கனிந்துருகிப் .... ✻
பண்ணுவதுன்திருப்பூசைபணிந்துபரவிமிக .... ✻
வெண்ணுவதுன்திருப்பஞ்சாக்கரமினியிப்புவியி, ... ✻
னண்ணுவதுன்பதமேமயிலைப்பதிநாயகியே .... (௮௩)

அகியேந்தியநற்பணுடைவிமீதுறையார்கவிசூழ் .... ✻
மகியேழுமற்றைச்சராசரம்யாவும்வகுத்தவாச் .... ✻
சிகியேந்தலாதித்திசாதிபர்போற்றியசிற்பரைவித் .... ✻
தகியேந்தெழிற்றுடித்தோளாய்மயிலைச்சதாநர்த்தியே (௮௪)

நந்திமுதற்கணத்தேவர்பராவுநற்காஞ்சிநக. .... ✻
ரந்திலெண்ணுன்கறமும்வளர்த்தாய்க்கெனையாதரித்து .... ✻
வந்தினிக்காத்தலரிதோமனச்செயன்மாற்றுமன்பர்... .... ✻
புந்தினிகருமயிலையில்வாழ்பரிபூரணியே ....(௮௫)

பூரணமாயெதினுந்நீநிறைந்தருள்பொற்பையந்த .... ✻
ஆரணமாயவரிதெனிலாசையென்ஞறிவில்வீழ்ந் .... ✻
தேரணமாம்புண்ணுடற்பேதையோர்குவதெங்ஙனஞ்சொல் ✻
வாரணமாரும்வயன்மயிலைப்பதிமாதரியே ....(௮௬)

தரித்தருள்கொன்றைச்சடைமுடிச்சங்கரன்பாப்பணிப்பூண்.. ✻
பரித்தவரன்மயிலைப்பதிச்செல்வியைப்பாடுமினோ..... .... ✻
திருத்தகுசெல்வமுங்கல்வியுநன்மையுஞ்சித்தியெட்டும் .... ✻
வருத்துங்கலிப்பிணிநீங்கிநம்பாலின்றுவாய்த்திடுமே .. (௮௭)

இடும்பைக்குரம்பையையென்ஞான்றும்பேணியிம்மேதினியிற்
படுந்துயரம்மனையேயினியேனும்பறித்தெனையாள் .... ✻
கொடுங்கதிர்வாட்கைமகிடனைச்செற்றகுமரியழற் . ... ✻
கடுங்கரளங்கைக்கொண்டெண்டான்மயிலையிற்காரணியே (௮௮)

காரினந்தங்கும்பொழிற்றலைப்பூகக்கவின்குலையை ……………*
வேரியந்தாமரைவாவியின்வாளைவிராயெழுந்து. ………… …. *
கூரியல்சங்கமலரச்சிதறிக்குதிகொளும்வன் . . …… . . …. …*
சீரியற்றென்மயிலைப்பெருமாட்டியைத்தேர்நெஞ்சமே .(௮௯)

நெஞ்சந்தனக்கணிபொற்றிருத்தாணெடுந்தண்டலையிற் … . .*
செஞ்சந்தனமணம்வீசுமயிலைச்சிவைபெயரா ………………*
வஞ்சமறச்சொலல்வாய்க்குந்தன்சேவைமலர்விழிக்கு ……… *
விஞ்சுமணியெனப்போற்றின்மலங்கள்விலகிடுமே …… (௯௰)

விலக்கரிதாரியமாயைக்கடலிடைவீழ்ந்தலைந்து…. .. ………. .*
கலக்கமுற்றேங்கிநிலைதடுமாறிக்கசடுறுமா……………… … . *
மலக்குற்றநீடியபேதையையாண்டருள்வாய்மயிலைத் ……… . *
தலத்துறைபேரொளியேசிவனாரிடந்தங்கணமே …. … …. (௯௧)

தங்குமெழின்மயிலைப்பதிமாதரிதாதுலவுங்…. ………………….*
கொங்குறுதேனளிபுண்மதலைத்தொடைக்கொற்றவனார்…….*
பங்கிற்றுங்கர்பகவல்லிபார்ப்பதிபத்தர்புகழ் …. ……………….*
சங்கரிநித்யகல்யாணியுனக்குச்சரண்சரணே ………. . .(௯௨)

சரணென்றுனைப்பணிந்தேத்தடியேன்சஞ்சலமகற்றிக் ……… .*
கிரணத்திகழுஞ்சிலம்பொடுதண்டையுங்கிண்கிணியா ………. *
பரணக்குலவும்பதாம்புயந்தந்தெனைப்பாலித்தருண் . .. ….*
முரணந்துறும்வயன்மாமயிலைப்பதிவாழ்முத்தமே … .. (௯௩)

வாழ்வளிக்கும்நமதெண்ணநிறைவுறுமாவருளுந் …… ……….*
தாழ்வகற்றுஞ்சமனைப்பொடியாக்குந்தாடலனாப் …………….*
பாழ்படுத்தும்பழவல்வினைவேரைப்பறித்தெறியுஞ்.. …. …….*
சூழ்மணிமாடமயிலையுமையெனுந்தொல்சுடரே …. …….(௯௪)

சுட்டெரிக்குங்கனல்போற்கொடுங்காமத்தோடக்கில்லை …… *
பட்டினம்பேதைவருந்துவனேவருள்பார்த்திரங்காய் ……..*
மட்டவிழ்புன்னையங்கானத்பிரான்றன்மனாட்டிமலர்ப் …. .. *
புட்பொலிபூந்தண்டலைமயிலைப்பதிப்பூங்கவளே…..…..(௯௫)

புங்கவளேபுவனம்பதினான்கையும்பூத்தவளே .... ✻
சங்குமணியுந்தடத்தினல்லார்களந்தண்ணகைபோற் .... ✻
றங்குமயிலைப்பிராட்டியெங்கற்பகவல்லிதனி . ... ✻
யைங்கரற்பெற்றவமுதேயென்றன்றுயராற்றுவையே .... (௯௬)

ஆற்றினிடுகணைப்பாதவமொத்தலைபுண்டுமலச் .... ✻
சேற்றிலகப்பட்டெழுநெறியின்றிச்சிறைப்படுவேற் .... ✻
றேற்றிச்சுகானந்தமூட்டியருண்மலர்ச்செப்பிலறு .... ✻
காற்றும்போடும்வளமார்மயிலையிற்கற்பகமே .... (௯௭)

கற்பகமாதவொடும்விட்புலத்தவர்காசினியோர் .... ✻
அற்பகமேவவந்தேத்துமயிலையிலாரமுதே . ... ✻
கற்பகவேல்விட்டசிங்காரவேற்றருங்கவுரி .... ✻
சற்பகணமணியுத்தமியாளருடந்தினியே .... (௯௮)

இனியாதொருதுணைநின்பதமன்றியெற்கிப்புவியிற் .... ✻
கனிவாயெனையழைத்தஞ்ஞானமாயைக்கசடறுத்து .... ✻
மனவாசியேணிப்படியேற்றிநின்றுருவைக்கண்டியான் . . . . ✻
தனியேயிருக்கப்புரிவாய்மயிலையிற்சாமளையே .... (௯௯)

சாமளையாமளைசந்திரசேகரிசத்திபரை . . .. ✻
கோமளசிந்துரமேனியம்மேவளங்கொண்மயிலைத் .... ✻
தேமளவும்புன்னைநீழற்பிரான்மகிழ்தேவியெளி .... ✻
யேமளியாருன்பதநீர்மைபாடவுவந்தருளே . . . . (௱)

வாழிசுருதிசிவாகமநால்வர்சொல்வாய்மைமுறை ....✻
வாழிதிருப்புன்னைநீழற்கபாலிமகிழுமம்மை ....✻....... ✻
வாழிகயன்முகன்சிங்காரவேற்குகனமன்னுயிர்கள் ....✻
வாழியெங்கற்பகவல்லியந்தாதிவழித்தினமோ........ . . , . . . ✻

திருமயிலைக்கற்பகவல்லியம்மையந்தாதி
முற்றிற்றுமுற்றும்.

இந்தபுத்தகம்வேண்டியவர்கள்- திருமயிலாப்பூர்-ஆம்பி
லீடன்வாராவதிதெருவில் - கதவு நம்பர் - ௰௨ -வது- வீட்டி
லிருக்கிற யில்கூலிலும் – சிந்தாத்திரிப்பேட்டை பாரக்குஸ்தெ
ருவுக்கடுத்த கிஷ்ணம்ம செட்டித்தெருவில் - நெ – ௩ - வது-
வீட்டிலும் - ஷை யூர் அருணாசலனையக்கர்தெருவில் - கெசசல-மு
னுசாமிநாயக்கர் குமாரன் - கெ- ஸ்ரீனிவாசுலு நாயக்கருடைய
பொச்சுபயின்டர் ஷாப்பிலும் இப்புத்தகமு மின்னும்பலவித
தமிழ்ப்புத்தகங்களும்ரொக்கவிலைக்கிவிற்கப்படும்.

இங்ஙனம்

ஸ்ரீகவும்வணக்கமுள்ள - வே - தா - பார்த்தசாரதிநாயகர்.